கல்லால் அணைகண்ட சுந்தர பாண்டிய

சாத்தந்தை குல "காலிங்கராயன்"  வரலாறு.........

"திரைகொண்ட வாரியை மாலடைத் தான்

செழுங் காவிரியை உரை கொண்ட சோழன்மு னாளடைத் தான் உலகு ஏழறிய வரை கொண்ட பூந்துறை நன்னாடு வாழஅவ் வானிதனைக்

கரை கொண்டடைதவன் வெள்ளோடைச் சாத்தந்தை காலிங்கனே" (தனிப்பாடல்)

அதாவது மேற்சொன்ன தனிப் பாடலின் பொருள் என்னவெனில், உலகின் மிகப் பெரிய சாதனைகள் நிகழ்ந்துள்ளன என்றும் அவைகளை

"சீதையை மீட்க இராமன் சேது அணை கட்டியதும்,

கரிகாலன் காவிரியில் கல்லணை கட்டியதும்,

பூந்துறை நாடு வாழ பவானி ஆற்றை தடுத்து காலிங்கராயன் அணை கட்டியதும்" ஆகும்.

கொங்கு வரலாற்றில் ஒப்பில்லாதவர் காலிங்கராயர் .இவர் கி . பி 13ம் நூற்றாண்டிலேயே முப்போகம் விளையும் வண்ணம் அணைகட்டி , கால்வாய் வெட்டி அவற்றை நாட்டுடமையாக்கினார் .

வெள்ளோடு கனகபுரத்தை சேர்ந்த "சாத்தந்தை குல" நஞ்சையகவுண்டர் மகன் லிங்கையன் என்கிற "காலிங்கராயன்" .

இவர் வீரபாண்டியன் (கி.பி.1265 - 1280) ஆட்சியில் தளபதியாகவும் அமைச்சராகவும் இருந்தார் . கொங்கு நாட்டை நிர்வகிக்கும் உரிமையை பெற்ற இவர் , வெள்ளோட்டை தலைமையிடமாக கொண்டவர் .

காளிங்கராயக் கவுண்டர் தன் மகனுக்கு திருமணம் செய்விக்க பெண் கேட்டு தன் தாய் மாமனான பண்ணை குலத்தாரின் வீட்டிற்கு சென்றிருந்தார்.

சமையல்காரன் பண்ணை குலத்தாரிடம் சமையலுக்கு  என்ன அரிசி போடுவது என்று வினவ, அதற்கு பண்ணை குலத்தார் கம்பு விளைகின்ற

சீமையில் வாழ்கிற இவர்களுக்கு அரிசியைப் பற்றி என்ன தெரிய போகிறது, ஏதாவது ஒரு அரிசியை போட்டு சமைத்துவை என்றாராம்.

அது கேட்டு வெகுண்டு எழுந்த காலிங்கராயர் எங்கள் நாட்டையும் நஞ்சை ஆக்கிவிட்டே பெண்ணுக்கு வருகிறேன் என்று சபதம் போட்டுக்கொண்டு வெளியேறினார்.

வெள்ளோட்டைச் சுற்றி கிழக்கே காவிரி, தெற்கே நொய்யல் மற்றும் வடக்கே பவானி என நதிகள் ஓடினாலும் வெள்ளோடு ஒரு மேட்டுநில வறண்ட பூமியாகவே இருந்தது.

தனது நாட்டினை வளப்படுத்த எண்ணிய காளிங்கராயர் வடக்கே பவானியிலிருந்து ஒரு கால்வாய் மூலம் தம் நாடு நெடுகிலும் நீர்பாய்ச்சி இறுதியில் காவிரியில் கலக்குமாறு ஒரு கால்வாய் வெட்ட எண்ணினார்.

ஆகவே,பவானி ஆற்றில் அணை கட்டி பூந்துறை நாட்டில் சாமை விளையும் காடெல்லாம் சம்பா விளையும் பூமியாக மாற்ற எண்ணினார் .

முதலில் பவானி ஆற்றில் ஒரு அணைகட்டி நீரினைத் தேக்கி பிறகு அந்நீரினை கால்வாய் மூலம் தன் நாடு வழியாக செல்லுமாறு திட்டம் வகுத்தார்.

இதற்கென வீரபண்டியன் உதவி , நாட்டில் விதித்த கலிங்கராயர் விநியோகம் என்ற வரி , குடும்ப பணம் ஆகியவற்றால் ஊராட்சி கோட்டை மலையையும்,

கல் கொண்டு வரும் வழியையும் விலைக்கு வாங்கி,

12 ஆண்டுகளில் கால்வாய் மற்றும் அணைக்கட்டும் கட்டி முடித்தார்.

கால்வாய் நீர் உடனடியாக விரைந்து செல்லாத வண்ணம் பாம்புபோல வளைந்து செல்லுமாறு கட்டியதால் தண்ணீர் நின்று மெதுவாக சென்றது. இதனால் நிலத்தடி நீரும் பராமரிக்கப்பட்டது. நாடும் வளம் பெற்றது.

காளிங்கராயர் பல சந்தர்ப்பங்களில் பொருளாதாரம் போதாத காரணத்தினால் சோர்ந்து விடுவாராம்.

அப்பொழுதெல்லாம் அவரது தயார்தான் அவருக்கு தைரியமூட்டி மகனே நம் வீட்டில்

"தயிர் விற்ற பணம் தாவாராம் வரை கிடக்கிறது, மோர் விற்ற பணம் முகடு வரை உள்ளது".

அவைகளை எடுத்து சென்று தைரியமாக அணையை கட்டு, கால்வாயை வெட்டு என்று ஊக்கமூட்டியுள்ளார்.

சில ஆண்டுகளில் பாண்டியர் ஆட்சி போய் போசளர் ஆட்சி கொங்கு நாட்டில் ஏற்பட்டது . இவ்வாட்சியில் தனக்கு உரிய மரியாதை இல்லை. காலிங்கராயர் தன் சொந்த நிலங்களை வளமாக்கத்தான் கால்வாய் வெட்டினார் என்ற சொல்லும் உண்டானது.

தாங்கள் செய்த அறச்செயலை தானோ தன் சந்ததியினரோ பயன்படுத்துவது நல்லதல்ல என்று எண்ணி அணையையும் கால்வாயையும் நாட்டுடமை ஆக்கி விட்டு,

"இனி நானோ என் வழிவந்தவர்களோ இந்த கால்வாயின் தண்ணீரை பயன்படுத்தமாட்டோம்"

என்று சத்தியம் செய்துவிட்டு தான் வாழ்ந்த வேள்ளோட்டை விட்டு காவடிக்கா நாட்டில் தன் மாட்டுப் பட்டிகளுக்கு தண்ணீர் ஊற்றுக் குழிகள் (ஊத்துக்குளி) இருந்த இடத்தில் புது ஊர் ஏற்படுத்தி அங்கு சென்று வாழ்த்தார் . அந்த இடம் தற்போதைய பொள்ளாச்சி அருகே "ஜமீன் ஊத்துக்குளி" ஆகும்.

பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குளியில் அரண்மனை என்றாலே சிறு குழந்தையும் கை காட்டும் இடமாக உள்ளது . தான் கட்டிய வாய்க்கால் நீரைத் தன்னுடைய சந்ததியினர் யாரும் பயன்படுத்த மாட்டார்கள் என்று அன்று கொடுத்த வாக்குறுதியை காலிங்கராயரின் வாரிசுகள் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

இப்போதைய ஜமீன் ஊத்துக்குளியில் காலிங்கராயன் பரம்பரையினர் 10 ஊர்களுக்கு அதாவது ஊத்துக்குளி, முத்தூர், போடிபாளையம், குளத்தூர், சேர்வைக் காரன்பாளையம், ராசிசெட்டிபாளையம், ஐயம்பாளையம், நல்லூத்துக்குளி, குமாரபாளையம், திம்மங்குத்து ஆகிய ஊர்களுக்கு வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர் .

காலிங்கராயர் மற்றும் சமத்தூர் ஜமீன்களுக்கு இடையில் பெண்ணெடுத்துப் பெண் கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது.

இப்போது ஜமீன் ஊத்துக்குளி அரண்மனையில் அகத்தூர் அருண்குமார் காலிங்கராயர் வசித்து வருகிறார். அருண்குமார் காலிங்கராயரின்

கட்டுப்பாட்டில் உள்ள அரண்மனையில் ஒரு பகுதி மட்டும் இப்போதும் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறது.

அரண்மனைக்குள் நுழைந்தவுடன் நம்மை வரவேற்பது பாடம் செய்யப்பட்ட சிறுத்தையும், கரடியும் தான் . ஊத்துக்குளி ஜமீன் முத்திரை இரு தந்தங்களுக்கு நடுவில் வைக்கப்பட்டுள்ளது.

பழங்காலக் கத்திகள், பாடம் செய்து வைக்கப்பட்ட யானையின் துதிக்கை, பல்வேறு வகையான மான் கொம்புகள், ஜமீன்தாரரின் மாட்டு வாகனங்கள், ஆங்கிலேயர் வழங்கிய சிம்மாசன இருக்கைகள் ஆகியவை இன்றும் பாதுகாக்கப்படுகின்றன.

நீர்மேலாண்மைக்கு இன்றளவிலும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது காலிங்கராயன் கால்வாய் என்றால் அது மிகையல்ல.

காலிங்கராயன் அணை கட்டிக் கால்வாய் வெட்டியது குறித்து பல்வேறு கதைகள் வழங்கினாலும் இப்பணியால் கொங்கின் பெரும்பான்மை நிலம் புன்செய்யாய் கொழிக்கிறது .

கொங்கு மக்கள் காலிங்கராயன் கால்வாய் என்றும் காலிங்கராயன் வாய்க்கால் என்றும் இரண்டு சொற்களையும் ஒரே பொருளில் பயன்படுத்தி வருகின்றனர்.

கோணல் கோணளாக கால்வாய் செல்வதால் "கோண வாய்க்கால்" என்றும் ,

இருபுறமும் நீர் கசியாமல் இருக்க காரையால் கரை கட்டப் பட்டதால் " காரை வாய்க்கால் " எனவும்,

கால்வாய் சில இடங்களில் சிறியதாக இருந்தால் " சின்ன வாய்க்கால்" என்றும் இடங்களுக்கு தகுந்தவாறு அழைத்தாலும் "காலிங்கராயன் கால்வாய் " என்பதே இதன் பெயர் .

கால்வாய் மற்றும் அணை ஏற்படுத்திய காலிங்கராயன் நினைவாக ஈரோடு அரசு பயணிகள் தங்கும் விடுதிக்கு " காலிங்கராயன் இல்லம் "என்று பெயர் வைத்து இன்றும் போற்றப்படுகிறது .

மிக எளிய அமைப்பை திட்டமிட்டு 725 ஆண்டுகள் முன்பு தேர்ந்த பொறியியல் அறிவுடன் கட்டி முடித்த அணையும் கால்வாயும் காலிங்கராயன் புகழ் பாடி சந்திர சூரியர் உள்ள வரை நின்று நிலைக்கும் என்பது திண்ணம்.

- வெளியீடு

கொங்கு தீரன் மணமாலை.

காலிங்கராயர் வரலாறு அனைத்து கொங்கு சொந்தங்களும் தெரிந்து கொள்ள SHARE செய்யுங்கள்.